Registered as a News Paper
பக்கங்கள் : 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 15 (31 - 08 - 1992) திங்கட்கிழமை ஓசை 195

## ஓராண்டு கற்பித்தோரும் பயிற்சி பெறலாம்

1993 ஜனவரி 1 ஆம் திகதியன்று தனியார் பாடசாலைகளில் தொடர்ச்சியாக ஓராண்டு காலம் ஆசிரியர்களாகக் கடமைபுரிந்துள்ளவர்களும் அரசாங்க ஆசிரியர் கலாசாலைகளில் இரண்டு வருடப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கமுடியும். இவர்களை பயிற்சிக்கென சேவையிலிருந்து விடுவித்து பயிற்சியின்போது தனியார் பாடசாலை முகாமைச் சபையால் சம்பளமும் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கோ பட்டதாரி ஆசிரியர்களுக்கோ பயிற்சி வழங்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது அத்துடன் அரச

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி தேர்தல் வழக்கு தீர்ப்பு

# தென்னிலங்கையில் கலகம் வெடிக்கலாம்

# கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)


ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பு இவ்வார இறுதிக்குள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் ஒருவித பரபரப்பு நிலவுகின்ற அதேவேளையில், தென்னிலங்கையில் கலகங்கள் வெடிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இதனைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும் ஏனைய முக்கிய பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் திரு ஆர். பிரேமதாசா தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும் இத்தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாகவும் குற்றஞ்சாட்டி தோல்வியுற்ற வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து சுமார் மூன்று வருடங்களாக நடந்து வரும இந்த வழக்கில் உச்சநீதிமன்றம தனது தீர்ப்பை வழங்கவுள்ளது.

செப்டம்பர் 2-ம் திகதி இத்தீர்ப்பு வெளியிடப்படும் என சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்த போதிலும் நான்காம் திகதியே தீர்ப்பு வழங்கப்படும் என பி. பி. சி. நேற்றிரவு தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலும், நீதிமன்ற வளாகத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதோடு, தீர்ப்பின் பிறகு கலவரங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் பொலிசார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். செப்டம்பர் 4 ஆம் திகதி தீர்ப்பு வழங்கும் நாளன்றும், அதற்குப் பின்னரும் ஒரு கிழமைக்கும் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளுக்குப் பாதுகாப்புத் தேவை என்று உச்ச நீதிமன்றப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு தீர்ப்பு வழங்கப்படும் வரை ...



மாதகல் பகுதியில் வீரச்சாவு அடைந்த லெப். கேணல் ராஜன் உட்பட ஒன்பது வீரவேங்கைகளின் உருவப்படங்களை தாங்கியஊர்தியையும் அதற்குபெண் போராளிகள் அஞ்சலிசெலுத்துவதையும் படத்திற்காணலாம்

## சிங்களக் கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகின்றன

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு தீர்ப்பு வழங்கப்படவுள்ளதை அடுத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தேர்தல் ஒன்றை விரைவில் ...

...ருப்பதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியே இவ் ஆயத்தங்களை மிக துரிதமாக மேற்கொண்டு வருகிறது எனவும், எதிர்க்கட்சிகள் தமது ...

... தலைவர்களைச் சந்தித்தும் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு ...

## லெப். கேணல் ராஜன் உட்பட 11 ...

கப்படவுள்ளதை அடுத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தேர்தல் ஒன்றை விரைவில் சந்திப்பதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டி இவ் ஆயத்தங்களை மிக துரிதமாக மேற்கொண்டு வருகிறது எனவும், எதிர்க்கட்சிகள் தமது உறுப்பினர்களைச் சந்தித்தும் கூட்டுச் சேரக் கூடிய கட்சித்

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு சாத்தியப்படாவிடின், கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். செல்ல சிங்கள பெற்றோர் அரசிடம் அனுமதி கோருகின்றனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் யுத்த முனைகளில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரதும், பொலிசாரினதும் உறவினர்கள யாழ்ப்பாணம் செல்ல தம்மை அனுமதிக்கும்படி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடமும் இராணுவ உயர் அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பௌத்த பிக்குகள் புலிகளின்நிலைப்பாட்டை அறிந்துவந்து தெரிவித்த போதிலும் அரசாங்கம் ஏன் மௌனம் சாதிக்கின்றது என்பதுபற்றி தம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். சென்று தடுத்துவைக்கப்பட்டிருப்போரை சந்திக்கவும், அவர்களது சுகங்களை அறியவும் தாம் ஆவலுடன் இருப்பதாகவும்தெரிவித்தனர்

கடந்த வருட இறுதியில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 40 இராணுவத்தினரதும் ஒரு பொலிசாரினதும் உறவினர்களை யாழ்ப்பாணம் வந்து பார்வையிட புலிகள் அனுமதித்த போதிலும் அரசாங்கம் அவர்களுக்கு தடைவிதித்திருந்தது.

புலிகள் மனிதாபிமானத்துடன் அனுமதித்தும் அரசாங்கம் தடைசெய்தமையையிட்டு கவலை தெரிவித்த உறவினர்கள், இதற்கான தீர்மானத்தை விரைவில் மேற்கொள்ளும்படி அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர்.

இணைப்பு

லெப். கேணல்

**ராஜனின்**

உருவப்படம்

# தம்பலகாமத்தில் மர்மத் தீ பலகிராமங்கள் எரிந்து நாசம்

தம்பலகாமம் தெற்குப் பகுதியில் உள்ள பல கிராமங்கள் கடந்த 22 ஆம் திகதி மர்மமான முறையில் மூண்ட தீயினால் எரிந்து நாசமாகி உள்ளது என தெரிய வருகிறது.

இப்பகுதியில் தொடர்ந்து வரும் கடுமையான வரட்சியினால் தென்னை மரங்கள் உட்பட அனைத்து மரங்களும் காய்ந்து விட்டன. இத தீ முதலில் அண்ணமார் திடல் என்ற இடத்தில் இருந்து மூண்டே ஏனைய இடங்களுக்கும் பரவியுள்ளது.

சின்னவர்ணமேடு, பெரிய வர்ணமேடு, வன்னிச்சியார் திடல், கரைச்சி திடல், கன்னிமேடு ஆகிய கிராமங்களுக்கும் தீ பரவியுள்ளது.

வரட்சியினால் மரங்களில் காய்ந்து கிடந்த தென்னோலைகளும், மட்டைகளும், பன்னாடைகளும் தீ கட்டுக் கடங்காது பரவக் காரணமாகின.

மீளக் குடியமர எவரும் முன் வராததினால் இக்கிராமங்கள் பல மாத காலமாக மனித நடமாட்டமின்றி வெறிச்சோடிய நிலையிலேயே இருந்து வருகின்

(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி வடபகுதிக்கு விரைவு

விடுதலைப்புலிகளால் கைபபற்றப்பட்ட விசைப் படகு எவ்வாறு கைப்பற்றப் பட்டது என்பதை ஆராயும் பொருட்டு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சின்ா ரெனஸ்பெனார்டோ வட பகுதிக்கு வந்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவி கின்றது.

வடபகுதியில் கடற்படைத் தளங்கள் உசார் படுத்தப்பட்டுள்ளதாகவும் கடற்படை கண்காணிபபு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரியவரு

[4-ம் பக்கம் பார்க்க]

கிறது.

அத்தோடு தீர்ப்பு வழங்கப் படும் வரை தங்களுக்கான தொலைபேசிஇணைப்புகளைத் துண்டித்து வடும்படியும் அவர்கள் கோரியுள்ளனர் இதன் மூலம் தொலை பேசி மூலம் வரும் மிரட்டல்களைத்தவிர்த்துக் கொள்ளலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

உச்ச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு இறுதியானது அத்துடன் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யச் சட்

[4-ம் பக்கம் பார்க்க]

### லெப். கேணல் ராஜன் உட்பட 11 மாவீரருக்கு

# தென்மராட்சி மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி

(நமது நிருபர்)

மாதகலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் கேணல் ராஜன்உட்பட ஒன்பது வீரவேங்கைகளினதும் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்திக்கு தென்மராட்சி மக்கள் திரண்டு வந்திருந்து தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தினர்.

நேற்று முன்தினம் தென்மராட்சிக் கோட்டத்தில்மாவீரர்கள்ஒன்பதுபேரின் உருவப்படங்கள்புலிச்சின்னம்பொறிக்கப்

[4-ம் பக்கம் பார்க்க]

# திருமலை நகரில்பஸ்குண்டுவெடிப்பு

# 9 பேர் பலி: 40 பேர் படுகாயம்

திருக்கோணமலை பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற பஸ் ஒன்றில் பார்சல் குண்டொன்று வெடித்ததால் ஒன்பது பேர் பலியாகினர், 40 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று காலை 11. 45 மணியளவில் இக்குண்டு வெடிப்பு இடம்பெறறது இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்சளில் ஒருவர் சிறிலங்கா இராணுவததைச் சேர்ந்தவர் எனவும் அநேகமானோர் சிங்கள - முஸ்லிம் இனத்தவர்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களில் அநேகமானோர் படுகாயமடைந்த நிலையில் உள்ளமையால் மரண எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

50 பிரயாணிகளுடன் புறப்பட தயாராக நின்ற பஸ் ஒன்றிலே இப்பார்சல் குண்டு வெடித்ததாகவும் தெரியவருகிறது.

திருக்கோணமலையிலிருந்து கண்டிநோக்கி இந்த பஸ் புறப்படவிருந்தசமயம் ஒரு நபர் நடத்துனரிடம் பார்சல் ஒன்றைக் கொடுத்ததாகவும் அப் பார்சலில் இருந்த குண்டு வெடித்ததாகவும் சொல்லப் படுகிறது.

இக்குண்டுவெடிப்பினால் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல பஸ்கள் சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.

## குமாரி பருத்தித்துறையில்

(வடமராட்சி)

திருக்கோணமலைக்குச் சென்ற 'குமாரி' கப்பல் மீண்டும் திரும்பி நேற்றுக் காலை 7 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது இக்கப்பலில் 3,000 மெற்றிக்தொன் மா எடுத்து வரப்பட்டுள்ளது. (82)

# வெள்ளை வாகனத்தில் வந்தோரே லலித்தைச் சுட்டனர்

## - நேரில் கண்டவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளை வாகனத்தில் வந்த ஆயுதம் தரித்த குழுவினராலேயே லலித் அத்துலத்முதலி சுடப்பட்டார் என சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்கா முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் உயர் கல்வி அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி சுடப்பட்டது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது சம்பவ தினம் காலை பத்து மணியளவில் இரத்மலானை தேர்தல் தொகுதியில் உள்ள கல்கிசை எனும் இடத்தில் சிறிலங்கா அரசுக்கெதிரான துண்டுப் பிரசுரங்களை லலித் விநியோகித்துக்கொண்டிருந்தார். இதன்போது 16 சிறி 4906 எனும் இலக்க வெள்ளைநிற வாகனம் ஒன்று திடீரெனவந்துநின்றது. இதில் பத்து முதல் பதினைந்து பேர் வரையில் இருந்தனர். இந்த வாகனத்திலிருந்து இறங்கிய முதலாவது நபர் லலித்தை நோக்கித் துப்பாக்கிப்

[4-ம் பக்கம் பார்க்க]

சிக்கனமாய் நீரைச் செலவழிக்க
இக்கணமே நாமோர் முடிவெடுப்போம்

## வரி விளம்பரம்

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் பழுது பார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30-ம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச் சீட்டு இல்லாமல் பொருள் பெற முடியாது. ஜீவிதா தொழில் நுட்பக்கூடம் ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். [சி/4955]

### தவறிவிட்டது

ஜெயபோதினி( நுணாவில் மேற்கு சாவகச்சேரி)என்பவருடைய கைப்பை நல்லூர் நுணாவிலுக்கு இடையில் தவறிவிட்டது. அடையாள அட்டைகள் உட்பட சில முக்கிய பொருட்கள் அடங்கியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். [சி/4971]

### ஒரேயொரு நூல்

அராலியூர் சுந்தரம்பிள்ளை-எழுதிய முதலாம்பிள்ளை 30/- இன்று விற்பனையாகும் ஒரேயொரு வானொலிநாடகநூல். இலக்கியப் பரிசு பெற்றது. 20 வீத கழிவு உண்டு. 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3068)

### your watches, Clocks & Radios

*Your Watches, Clocks& Radios to repair? Contaetus immediately we repair with ful guarantee all Watch Batteries available Dilka Watch works* 284, Stanely Road Jaffna. (opposite old Vihare) (சி-4970)


# 8,39,000 இலங்கைச் சிறுவர்கள் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றனர்

## போரினால் 5 லட்சம் சிறுவர்கள் பாதிப்பு; வருடாந்தம் 32,000 பேர் வீதம் அதிகரிப்பு

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் போரினால், பாதிக்கப்பட்டிருக்கும் நான்கு இலட்சத்து எண்பத்தேழாயிரம் சிறுவர்கள் உட்பட மொத்தம் எட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரம் சிறுவர்கள்பிரச்சினைகளில் சிக்கியுள்ளனர் எனவும், இத்தொகைவருடாந்தம்முப்பத்திரண்டாயிரம் என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது எனவும் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்களில் சுமார் ஓர் இலட்சத்து எழுபதாயிரம் பேர் அங்கவீனர்கள் எனவும், ஓர் இலட்சம் சிறுவர்கள் வரையில் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும், சுமார் பத்தாயிரம் பேர் வீதியோரச் சிறுவர்களாக உள்ளனர் எனவும், சுமார் முப்பதாயிரம் சிறுவர்கள் பாலியல்விவகாரங்களில் ஈடுபடுத்தப் படுகின்றனர் எனவும், சுமார் நாற்பத்திரண்டாயிரம் பேர் வரை அநாதைகளாகக் கைவிடப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

யுனிசெப், தொழில் அமைச்சு, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், புனர்வாழ்வு, புனர் நிர்மாணஅமைச்சு,சமூக நல அமைச்சு என்பவற்றிலிருந்து பெற்ற புள்ளிவிபரங்கள் மூலம் இத்தகவல்கள் திரட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறார்களில் மூன்றிலொரு பகுதியினர், பதின்நான்கு மாவட்டங்களிலுமுள்ள நானூற்றி எழுபது முகாம்களில் தங்க வைக்கப்படடுள்ளனர் இத்தகைய முகாம்கள் பல வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது

## விடத்தல்தீவு செல்வதற்கான அனுமதிமுறையில் மாற்றம்

(நமது நிருபர்)

விடத்தல் தீவுக்குப் பயணம் செய்வதற்கான அனுமதி பெறும் முறையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி விடத்தல் தீவுக்கான பயண அனுமதி பெறுவதற்கு இத்தீவுக்கு போக வேண்டிய காரணத்தை தகுந்த ஆதாரங்களுடன் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரின் உறுதிப் படுத்திய கடிதத்துடன் வதிரி, முத்திரைச் சந்தி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இது யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே பொருத்தமானதாகும். ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயின் அவரவர் பிரிவு அவசர அனுமதி வழங்கும் செயலகத்தில் தமது ஆவணங்களை ஒப்படைத்து இரு நாட்களின் பின் அனுமதி முடிவைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல் தீவிற்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் அனுமதி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் நிமித்தம் செல்வதாக இருந்தால் மட்டுமே விடத்தல் தீவிற்கான பயண அனுமதி வழங்கப்படும் என்றும போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

## பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம்

# மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்ய முஸ்தீபு

பொதுச் சேவை தொழிற்சங்கச் சம்மேளனம் அரசிடம் முன்வைத்திருக்கும் சம்பள உயர்வுக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து அரச ஊழியருக்கான சம்பளத் திட்டம் ஒன்றை அமுல் நடாத்தும் வரை அரச ஊழியர்களுக்கு இடைக்கால அலவன்சாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் அல்லாவிட்டால் அடுத்த மாத நடுப்பகுதியில் இருந்து தொழிற்சங்கநடவடிக்கையில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்க சம்மேளனத்தின் அமைப்பாளரான எஸ். எம். பியதாச அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

அரசாங்க சேவையில் உள்ள ஊழியர்களுக்கு 50 சத வீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட வேண்டும் அரசாங்க ஊழியர்களின் குறைந்த பட்ச சம்பளம் 3000 ரூபாவாக இருக்க வேண்டும். இவையே எமது மூன்று கோரிக்கைகளாகும். இவை குறித்து அரசுடன் பேச்சு நடாத்தினோம்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிந்தபின் சம்பள உயர்வு வழங்குவதாய் அவர்கள் உறுதியளித்தனர். யுத்தத்தை அரச ஊழியர்கள் ஆரம்பிக்கவில்லை. அரசாங்கமே அரசியல் நலனுக்காக யுத்தத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறது. எம்மைப் பொறுத்தவரை யுத்தத்திற்கு எமது முழு எதிர்ப்பையும் தெரிவிக்கின்றோம். நாம் சமாதானத்தை விரும்புகிறோம் யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டும். எதிர்க்கட்சிகள் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமெனக் கோருவது யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான தந்திரோபாயமாகும்.

இன்று அரச திணைக்களங்களில் நாலரை இலட்சம் ஊழியர்கள் உள்ளனர். அவர்களில் ஒன்றரை இலட்சம் பேர் எமது சம்மேளனத்திலும் சங்கங்களிலும் அங்கத்தவர்களாக உள்ளனர் என பத்திரிகையாளர் மாநாடொன்றில் பியதாச தெரிவித்தார்.

## தென்னிலங்கை பகுதிகளில் கொள்ளைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கைப் பகுதிகளில் கொள்ளை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊறகஹ பொலிஸ் பகுதியில் இருக்கும்தெல்கமலகொட என்னும் இடத்தில் மோட்டார் சைக்கிளில் காலை ஆறு மணியளவில் வந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து ஆயுத முனையில் பணம், நகை, மோட்டார் ...

... என்னும் இடத்தில் இருக்கும் வீடு ஒன்றினுள் பிரவேசித்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பணத்தைச் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுதவிர பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டுக்குள் நள்ளிரவு வேளையில் புகுந்த மூவர், அதிபரின் மனைவி மற்றும் மக்களை அறையினுள் வைத்துப் பூட்டிவிட்டு அதிப...

## ஹாட்லிக்கு கேடயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற பொது அறிவு இறுதிப் போட்டியில்ஹாட்லிககல்லூரி வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது.

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கத்தின் 3ஆவது ஆண்டு ஞாபகார்த்ததினத்தையொட்டி யாழ் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் பேராசிரி...

## சுகாதாரப் பிரதிநிதிகளுக்கு நாளை முதல் பயிற்சி

(கொழும்புத்துறை)

தற்போதைய சுகாதாரப் பிரச்சினைகளை நோக்குமிடத்து வைத்திய சேவையால் மட்டும் கட்டுப்படுத்தக் கூடிய நோய்கள் கட்டுப்பாட்டிலுள்ளன. ஆனால், நோய்த்தடுப்பு முறைகளைப பயன்படுத்தி மக்களின் ஒத்துழைப்புடன் கட்டுப்படுத்த வேண்டிய நோய்கள் இன்னமும் கட்டுப்படுததப்படாமல் உள்ளன என்று சுகாதார வைத்திய அதிகாரி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

எமது பகுதி சுகாதார நிறுவனங்களில் காணப்படும் மனிதவளப் பற்றாக்குறை, நோய்த்தடுப்பு சேவைக்கான வாகன வசதிகள் இல்லாமை, அண்மைக்கால யுத்தநிலைமை ஆகியவற்றினால் நோய்த்தடுப்புச் சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மக்களிடையே சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பைப் பெறவும், யாழ் மாநகர சபைப் பிரதேசத்தில் வட்டார ரீதியாக அமைக்கப்பட்ட சுகாதாரக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு 'யூனிசெவ்' உதவியுடன் 4 நாட்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது

நாளை காலை 8.30மணிக்கு யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தில் பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சு. டிவகலாலாவும்,சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்திஅதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு த.ப. முருகையாவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (24)

## அகதிகளுக்கு உதவி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் றொட்டரக் கழகத்தினரால் யாழ் நகரப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட (3000) உடைகளும், உலர் உணவும், பாத்திரங்களும் வலிகாமம் பகுதியில் உள்ள மானிப்பாய் அந்தோனியார் ஆலய அகதிமுகாம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை முகாம் மற்றும் இரு சிறிய முகாம்களுக்கும் 24-8-92 அன்று வழங்கப்பட்டது.

யாழ் றோட்டரக்கழகத்தின் இச் சேவையை இப் பகுதி அகதிமுகாம் பொறுப்பதிகாரி வெகுவாகப் பாராட்டியுள்ளார். [24]

## சேவையிலுள்ள ஆசிரியருக்கு இருவருட விசேட பயிற்சி

(கொழும்பு)

தற்போது சேவையிலுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு இரண்டு வருட காலம் ஆசிரியர் கலாசாலைகளில்பயிற்சி அளிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இப் பயிற்சி தற்போது சேவையில் உள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கும். பட்டதாரிகளுக்கும்வழங்கப்படமாட்டாது. இவர்களுக்கு வேறாகப் பயிற்சி அளிக்கப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

1991 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்கள் எல்லாதவர்கள் அடுத்த வருடம் முதல் இந்தப் பயிற்சிகளை பெறுவர்.

ஓர் ஆசிரியருக்கு ஒரு பாட நெறியில் மட்டுமே பயிற்சி அளிக்கப்படும். ஆனால் ஆரம்பக் கல்வி பயிற்சி நெறி ஆசிரியர்கள் இன்னுமொரு நெறியில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர்.

## சஞ்சிகை வெளியீடு

(வடமராட்சி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா திரு. ச. மதிரூபன் தலைமையில் நடைபெறறது.

இவ்விழாவில் ஆய்வுரைகளை கவிஞர் திரு. யோ. வாஞ்சிநாதன், டாக்டர் திரு. முருகானந்தன், திரு. தெணியான் திரு. பார்த்தீபன் ஆகியோரும்,

ஆசியுரையை கல்லூரி ஆசிரியர் திரு. கா. நீலகண்டன், உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. என். அனந்தராஜ்...

## வெடிகுண்டு வெடித்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

விறகு வெட்டும்போது மரத்தில் புதைந்திருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்து குடும்பப்பெண் ஒருவர் பலத்தகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புன்னாலைக் கட்டுவனில் நடைபெற்றது. இச்சம்பவத்தில் ஜி.புஸ்பராணி (வயது 35) என்பவர் காயமடைந்தவராவார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 6 உம் அதற்கு மேற்பட்ட வகுப்புகளை உடைய...


நினைவு கூருகின்றோம்...

1992 - 08 - 31

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 6 உம் அதற்கு மேற்பட்ட வகுப்புகளை உடைய பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு மருதனார்மடக் கோட்டக்கல்விஅலுவலகத்தில் நடைபெறும் என பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மருதனார்மடக் கோட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட சம்பந்தப்பட்ட அதிபர்கள் தவறாது சமுகமளிக்கும் படியும். வரும் போது முன்னோடிப் பரீட்சை தொடர்பான படிவங்களை கொண்டுவரும் படியும் அவர் கேட்டுள்ளார்'

## ஐக்கிய விளையாட்டு கழகம் சாம்பியனாகியது

மாவட்ட ரீதியில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்ட விளையாட்டுப்போட்டி அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து 5 வருடங்கள் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டு வந்த யாழ்-சென்ரணீஸ் அணியை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் முறியடித்து சாம்பியனானது (82)

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் விஷேட அபிஷேகம், பூசை வழிபாடு ஆராதனையை அடுத்து மாலை விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்க உள்ளார். (24)

டார் சைக்கிளில் காலை ஆறு மணியளவில் வந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து ஆயுத முனையில் பணம், நகை, மோட்டார் சைக்கிள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

மாத்தறை மகாறாம பாலத்தில் நடந்து சென்று கொண்டிருந்த மாணவி ஒருவரின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலி ஒன்றை அபகரித்துக் கொண்டு ஓடிய நபர் துரத்திப் பிடிக்கப்பட்ட போது முன்னாள் இராணுவத்தினர் என்பது தெரிய வந்துள்ளது.

படல்கும்புற பொலிஸ் பகுதியில் மடுல்கொட்ட அரால ளிரவு வேளையில் புகுந்த மூவர், அதிபரின் மனைவி மற்றும் மக்களை அறையினுள் வைத்துப் பூட்டிவிட்டு அதிபரின் கைகளைக் கட்டிய பின்னர் அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். வீட்டிலிருந்த பணம், நகைகளையும் இக் கோஷ்டி அபகரித்துச் சென்றுள்ளது. இச் சம்பவம், வலஸ்முல்ல கலகிட்டிய என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது. கலகிட்டிய மகா வித்தியாலய அதிபரான முனசிங்க பியதாச ( 49 வயது ) என்பவரே இச் சம்பவத்தில் கொலையுண்டவர் ஆவார்.

## ஒரேமாதிரி உடை; இரு தமிழ் வாலிபர் கைது

(கொழும்பு)

ஒரே மாதிரியான உடையணிந்திருந்த காரணத்தினால் இரண்டு தமிழ் வாலிபர்கள் கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

சங்கானையைச் சேர்ந்த இந்த இரண்டு இளைஞர்களும் சாம்பல் நிறமான உடைகளை அணிந்திருந்தனர் எனவும் வெளிநாடு செல்வதற்காக தொழில் முகவரைச் சந்திக்க சென்ற போதே இருவரும் கைது செய்யப்பட்டனர் என தெரிய வருகிறது.

## செஞ்சோலை இசை மாலை கோண்டாவிலில் சாதனை!

செஞ்சோலை சிறுவர் இல்ல வளர்ச்சி நிதிக்காக யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் 'இசைமாலை' நிகழ்ச்சி நடாத்தப்பட்டுவருகின்றது.

நேற்று முன்தினம் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இசை மாலை நிகழ்ச்சிக்கு கோண்டாவில் பகுதி மக்களிடமிருந்து ரூபா இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளது. மற்றைய எந்தப்பகுதியிலும் இப்படியான பெருந்தொகை ஒரு நிகழ்ச்சியிலும் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

கோண்டாவில் வாழ் மக்களின் முன்மாதிரியான இந்தச் செயலைப் பின்பற்றி மற்றைய பகுதிகளிலும் உள்ள தமிழீழ மக்கள் அனைவரும் செஞ்சோலை சிறுவர் இல்ல வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படுகின்ற இசைமாலை நிகழ்ச்சிக்கு பெருமளவில் ஆதரவு வழங்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக்கழகத் துணைப்பொறுப்பாளர் தேவர் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஞாபகார்த்தத்தின் தந்தையொட்டி யாழ் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கத்தின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (82)

ஆசியுரையை கல்லூரி ஆசிரியர் திரு. கா. நீலகண்டன், உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. என். அனந்தராஜ் ஆகியோரும் நிகழ்த்தினர்.

கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சிதம்பரப்பிள்ளை நூலை வெளியிட்டு வைத்தார். (82)


### 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 31 |
| 10 | 08 |
| 1946 | 1989 |



### ஞூசை அல்பேட்எட்வீனம்மா

பாசம் நேசம் அன்பு ஈதல் விருந்தோம்பல்
இரக்கம் இந்தனைக்கும் உரித்தானவளே அம்மா
கூண்டு திறந்ததம்மா தாய் பறவை பறந்ததம்மா
கூடிய துணையும் குஞ்சுகளும் வாடிக்கலங்குதம்மா
நீர்விட்டுப் போன ஆலவிருட்சம் வேர்பட்டு விழுதுபட்டு கிளைமுறிந்து இருந்த கூட்டுப்பறவைகள் வேறு திசை பறந்ததம்மா
நீ சேயாக மீண்டும் இங்கு வந்து பாரம்மா நிர்க்கதியற்றவனாக தனிமரமாக நிற்கின்றான் உன்பதி.
ஆண்டவன் சன்னதியில் அவன் புகழ்பாடி நித்திய ஜீவனில் நிலைத்து நிற்க இறைபலி செலுத்துகிறோம்
ஒரு நாட்பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே.

31-8-92 இன்று காலை 5.45மணி புனித யாகப்பர் ஆலயம் குருநகர், காலை 6.15 மணி கொஞ்சேஞ்சிமாதா ஆலயம், 2-09-92 அன்று மாலை 4மணிக்கு புனிதமரியாள் பேராலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

- இவரால் துயருறும்
கணவன் ஞூசை அல்பேட்,
பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

குருநகர்.
(சி/4967)



## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 31

1985-ம் ஆண்டு இதே தினத்தில் தேசவிரோதிகளால் வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான
**இராசையா மோகன்** [6-ம் கட்டை, விளாங்குளம் திருமலை]

1988-ம் ஆண்டு மட்டக்களப்பு - வண்ணாத்தி ஆற்றுப் பகுதியில் இந்தியப்படையினா மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
**லெப்.ரமேஸ்** (தம்பிராசா சோமசுந்தரம் - வேப்பவெட்டுவான், செங்கலடி, மட்டக்களப்பு)

1989-ம் ஆண்டு ஆவரங்காலில், இந்தியபடையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட புத்தகலடடியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1990 -ம் ஆண்டு எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எம்மைப்பிரிந்த -
**சீனு** [தோமாசிங் சேர்ச்சில் - 4-ம் வட்டாரம், நெடுந்தீவு, மததி]

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**லெப்.ராசா** (அமிர்தலிங்கம் சிவயோகநாதன் - கொக்குத்தொடுவாய், மணலாறு)
**லெப்.அன்பு** (தியாகராசா சிறிகாந்தன் - முள்ளியவளை, முல்லைததீவு)
**கவி** (அந்தோனிப்பிள்ளை அருள்நாயகம் - ஆலையடி, திருநகர், கிளிநொச்சி)

யாழ்-கோட்டைப்பகுதியில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-
**ஆனந்தன்** (முத்துக்கிருஸ்ணன் குணாளன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட வந்தாறுமூலை, மாவடி வேம்பைச் சேர்ந்த தந்தை, மகன் ஆகிய இரண்டு தமிழர்கள் - முஸ்லிம் குழு ஒன்றினால் வெட்டிக் கொல்லப்பட்ட ஏறாவூர் - 4, செங்கலடிப் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு தமிழ்ப் பெண்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் மூஸ்லிம் குழு ஒன்றினால் சுடடுக் கொல்லப்பட்ட ஏறாவூர் காளி கோயில் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4961)

### சிந்தனைக்கு

வினை விதைத்தவன்
அதனையே அறுவடை செய்வான்.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சகலரும் பொறுப்பு

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித் அத்துலத்முதலி துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதாக ஒரு செய்தி தெரிவிக்கின்ற அதேவேளை, லலித் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகவில்லை குண்டர்களால் தாக்கப்பட்டு, காயமடைந்த நிலையில் உள்ளார் என வேறோர் செய்தி தெரிவிக்கின்றது. இதில், லலித் எதனால் தாக்கப்பட்டார், எவ்வாறு தாக்கப்பட்டார், அவரது இன்றைய உடல் நிலைபரம் என்ன என்பதைவிட, மூன்றாம் உலக நாடுகளில் நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடு எனப் பெருமை பேசப்படும் சிறிலங்காவில் 'ஜனநாயகத்தின்' இன்றைய நிலை என்ன என்பதே கேள்வியாகும்.

அண்மைக் காலத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குண்டர்களினால் தாக்கப்படுவதும், பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் அன்றாட நடவடிக்கையாக மாறி வருகின்றது. அண்மையில், கோட்டைப் புகையிரத நிலையப் பகுதியில், அரசாங்கத்திற்கு எதிரான 'கையெழுத்து வேட்டையில்' ஈடுபட்டிருந்த லலித் குழுவின் மீது அரச சார்புக் குண்டர்கள் கோஷ்டி ஒன்று தாக்கியது. அங்கிருந்த உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், தாக்கப்பட்டார்கள். அடுத்து எதிர்க்கட்சியின் பத்திரிகையான 'அத்த' பத்திரிகையில் 'கேலிச்சித்திரம்' வரைபவர் கத்திக்குத்துக்கு இலக்கானார். கொலை மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது. இறுதியாகநேற்று முன்தினம் திரு லலித் அத்துலத்முதலி மீது தாக்குதல் இடம் பெற்றுள்ளது. (இது எவ்வாறான தாக்குதலாக இருந்தாலென்ன)

ஆனால், இத்தாக்குதல் திடீரென, தனியாக திரு. பிரேமதாசா ஆட்சியில், பிரேமதாசாவின் காடையர் குழுவினால் மட்டும் உருவாக்கப்பட்டதாக கூறிவிட முடியாது. சிங்கள அரசின் தலைவர்கள் நீண்டகாலமாக ஜனநாயகம் பற்றிப் பேசி வரினும், அவர்கள் தமது அரசியல் எதிரிகளை அடக்குவதற்கு வன்முறைகளையும், குண்டர்களையும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையுமே காலம் காலமாக மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், ஆரம்பத்தில், அதாவது அந்நியர்கள் இலங்கையை விட்டு

### கருணாநிதி குடும்பம் மீது விசாரணை;

# தி.மு.கவின் எதிர்ப்பை தணிக்க ஜெயலலிதா வகுத்துள்ள புதிய யுக்தி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கட்சிகளும் தொடுத்த கண்டனக் கணைகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இதுகால வரை முயற்சிகளை மேற்கொண்டு வந்த ஜெயலலிதா அரசாங்கம் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்கு பாதிப்பைக் கூடுதலாக ஏற்படுத்த முடியுமோ அந்த இடத்தில் பதில் தாக்குதலை நடாத்த முயற்சித்துப் பார்க்கிறது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருணாநிதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கும் எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் சிவசுப்பிரமணியம் ஆணைக்குழு ஆறுமாத காலத்தில் அந்த குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மையை ஆராய முயற்சிக்கும் அதேவேளை, விசாரணைக் காலத்தின்போது அ. தி.மு க, அரசாங்கம் சாத்தியமானளவுக்கு அரசியல் அனுகூலத்தை அடைய விரும்பும் என்றும், கூறப்படுகிறது.

ஜெயலலிதா ஆட்சியில் ஊழல் மலிந்து விட்டதாகவும் ஜெயலலிதா கொடுங்கோன்மை ஆட்சி நடத்துவதாகவும் தி மு க.தொடர்ச்சியாக கண்டனங்களை தெரிவித்துபெரும் எதிர்ப்பிரசாரத்தை நடத்தி வந்திருக்கிறது.இப்போதுவிசாரணை ஆணைககுழு நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ளலாம் என வழிவகைகளை ஆராய்வதிலேயே தி.மு.க.வின் நேரத்தை செலவிட வேண்டியேற்படும் என்பதால் ஜெயலலிதா அரசுக்கெதிரான பிரசாரத்தில் அவர்கள் சற்று மெதுவாகவே செல்ல வேண்டி வரும்.

முதலமைச்சருக்கு எதிராக தி.மு க மூன்று பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கிறது. மக்களிடம் அந்தக் குற்றச்சாட்டுக்களைபிரசாரப் படுத்த தி மு.க. சகல சந்தர்ப்பங்களையும பயன்படுத்துகிறது.

இந்தக்குற்றச்சாட்டுக்களை ஜெயலலிதா மறுத்த போதிலும், அமைச்சர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களும், கட்சிக்காரர்களும் தி. மு. க. வின் குற்றச்சாட்டுக்களை சகல மேடைகளிலும் எதிர்த்துப் பேசுவதாக இல்லை மறுபுறத்தில் அ. தி. மு. க. கூட்டங்களில் பேசுபவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் உரைகளில் பெரும் பாகத்தை ஜெயலலிதாவை புகழ்வதிலேயே செலவிடுகின்றனர்.

இதனால், தி. மு. க. வினர் ஜெயலலிதா அரசுக்கு எதிராக திறம்பட மேற்கொள்ள முடிகிறது.

இந்த நிலையில், கருணாநிதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கும் எதிராக ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதன் காரணமாக தி. மு. கவுக்குள் புயல் ஏதும் கிளம்புமோ என்று அ.தி மு.க. அங்கலாய்த்துக் கொண்டிருப்பதையும் உணர முடிகிறது.

தி. மு. க. வின் கட்சி பதவிகளுக்கு நடைபெற்ற தேர்தல்களின் போது ஏற்பட்ட விரிசல்களைத் தணிப்பதற்குக் கருணாநிதியும் ஏனைய தலைவர்களும் முயற்சி மேற்கொண்டிருக்கும் தருணத்தில் ஆணைக்குழு அறிவிப்பு வந்திருக்கிறது.

அரசாங்கம் தொடுத்திருக்கும் தாக்குதலைச்சமாளிக்கதி. மு. க தொண்டர்கள் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மறக்கக் கூடிய சாத்தியப்பாடுகளை நிராகரிப்பதற்கில்லை என்கின்ற போதிலும், தலைவருக்கும் குடும்பத்தினருக்கும் எதிராக இன்னொரு விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதை அடுத்து தி. மு. க. தொண்டர்களில் கணிசமான ஒரு பகுதியினர் உற்சாகமிழந்து போவர் என்று அ. தி. மு. க. எண்ணுகிறது

இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் தி. மு. க. வின் தலைமைப்பீடத்திற்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்பை இன்னமும் கூட சீர் செய்ய முடியாதிருக்கும்போது இன்னொரு ஆணைக்குழு தி. மு. க. வை பொறுத்த வரை ஒரு அசௌகரியமான அம்சமே என்பதில் சந்தேகமில்லை.

### ஊழல் அதிகார துஷ்பிரயோகம்

# ஜெயலலிதா மீது விசாரணை நடத்தக்கோரி தி.மு.க. பேரணி

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலிதா மீதான ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரி திராவிட முன்னேற்றக்கழகம் அடுத்த மாதம் 16ஆம் திகதி சென்னையில் பேரணியொன்றை நடத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த தீர்மானத்தை சென்னையில் கடந்த வாரம் கருணாநிதி தலைமையில் கூடிய தி. மு. க நிர்வாகக்

பப்ளிகேஷனுக்காக ஜெயலலிதா கொள்வனவு செய்தமை முதலமைச்சருக்கான ஒழுக்கக் கோவையை மீறும் செயலாக அமைந்திருப்பதுடன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும் இருக்கிறது என்று தி. மு. க நிர்வாகக்குழு கருதுகிறது.ஜெயா பப்ளிகேஷனின் பங்குதாரராகஜெயலலிதா இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கருணாநிதிக்கு எதிராக நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழுவை கடுமையாக கண்டனம் செய்

யும் தி. மு. க. நிர்வாகக் குழு கண்டனம் செய்திருக்கிறது.

சகல சவால்களையும் முழுப் பலத்துடன் எதிர்நோக்கத் தயாராயிருப்பதாக கூறியிருக்கும் நிர்வாகக்குழு ஆளும் கட்சியில் ஊழல் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் அடக்கு முறைகளையும் அம்பலப் படுத்துவதற்கு மாநிலம் முழுவதும் தீவிர பிரசாரம் செய்யுமாறு கழகத் தொண்டர்களுக்கு தெரிவித்துள்ளது.

கருணாநிதிக்கு எதிரான விசாரணை ஆணைக்குழு மாநில அரசின் ஒருதலைப்

### பழனி இடைத் தேர்தலில்

# மூப்பனார் குழு நியமனம்? அ.தி.மு.க. எதிர்க்கும்

(சென்னை)

தமிழகத்தில் பழனி லோக்சபா தொகுதிக்கு நடைபெற வேண்டியிருக்கும் இடைத் தேர்தலில்மூப்பனார்குழுவைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரை காங்கிரஸ் நிறுத்தினால்அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அதனை எதிர்க்கும் என தமிழக கல்வி அமைச்சரும், கட்சித்தலைமைச் செயலாளருமான சி.அரங்கநாயகம் எச்சரித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மகாநாட்டில் இதனைத் தெரிவித்த அரங்கநாயகம், வாழப்பாடி குழுவினர் மத்தியில் இருந்து வேட்பாளரை இடைத்தேர்தலில் போட்டிக்கு நிறுத்துமாறு அ தி.மு.க. வற்புறுத்தும் என்றும், இக்குழுவுடன் அ.தி.மு க. சுமூகமான உறவுகளை கொண்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக தி.மு.க வினர் பயன்படுத்துவதைப் போல காரசாரமான வார்த்தைகளை மூப்பனார் குழு மேடையில் பயன்படுத்துகிறது என்றும், பொது மேடைகளில் அ.தி.மு.க. அரசுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவாறு பேச்சுக்களை அவர்கள் நிகழ்த்துகிறார்கள் என்றும்.

தேர்தல் முடிவடைந்தவுடன் தேர்தல் கூட்டும் முடிவடைந்து விட்டது. பின்னர் நிலவுவது இருகட்சிகளுக்கு இடையிலான தோழமை உறவே. இராமமூர்த்தி தலைமையிலான தமிழக காங்கிரஸை எமது நேச சக்தியாக நாம் நடத்துகிறோம் அதே போல் டில்லியில் அகில இந்திய காங்கிரசை நேசசகதியாக நாம் நடத்துகிறோம் மூப்பனார குழுவினர் தமிழக காங்கிரஸ்தலைமைப்பீடத்தை எதிர்க்கிறது என்பதற்காகஅவர்கள் எமக்கு எதிராக தொடர்ந்து பேசி வருவதை தொடர அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

# சுவாமியின் மதிய விருந்து; அ. தி. மு. க.எம்பிக்கள் மறுப்பு

(டில்லி)

ஜனதா கட்சித் தலைவர் டாக்டர்சுப்பிரமணியம்சுவாமி அளித்த எந்தவொரு விருந்திலும் தாங்கள் எவருமே கலந்து கொள்ளவில்லை என அ. தி. மு. க எம். பிக்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம்சுப்பிரமணியம் சுவாமி அளித்த மதியபோசன விருந்துபசாரமொன்றில்அ. தி. மு. க. எம்பிக்கள் சிலர் கலந்து கொண்டதாக டில்லி பத்திரிகைகள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருந்தன.

"அச் செய்திகள் தவறானவை. எம். பி.க்கள் கட்சிக்கு விசுவாசமானவர்கள். முதலமைச்சர் ஜெயலலிதாவின் உன்னதமான தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் கட்சியில் ஐக்கியப்பட்டு செயற்படுகின்றனர்'' என்று பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அங்கம் வகிக்கும் பதினேழு அ. தி. மு. க. எம்.பிக்கள் கூட்டாக கைச்சாத்திட்ட அறிக்கையில் தெரிவித்தனர்.

# ஆய்வு நிலையங்கள் தர்ம சத்திரங்கள் அல்ல

(சென்னை)

அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் தர்மஸ்தாபனங்கள் போலச் செயற்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது என்றும், ஒவ்வொரு விஞ்ஞானியும் உற்பத்தி நோக்கத்தோடு தங்கள் திறமையைக் காண்பிக்க வேண்டும் என்றும் மத்திய அமைச்சரான ரங்கராஜன் குமாரமங்கலம் கூறினார்.

பம்பாயில் செய்தியாளர்களிடையே இதனைக் கூறிய பின்னர் சென்னையில் பொறியியல் கல்லூரியில் சுரங்கப் பொறியியல் துறைக்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மேலும் கூறியதாவது,

இந்தியா செயற்கைக் கோள்களை உருவாக்கிக் கொள்ளும் பட்சத்தில் அமெரிக்காவிற்கு அது வர்த்தக ரீதியில் பாதிப்பை உண்டாக்கும் என்பதால் இந்திய விண்வெளி நிறுவனம், ரஷ்யாவிடமிருந்து வாங்கும் தொழில்நுட்பத்தைக் கூட அது எதிர்க்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

அறுபது கோடி ரூபாயில் இந்தியா தயாரிக்கும் செயற்கைக் கோளை அமெரிக்கா முந்நூறு கோடி செலவில் உருவாக்குகிறது என்றும் தெரிவித்தார்.

# அருந்த செயற்கை கோள்

ஜனநாயகம் பற்றிப் பேசி வாலும், ...
தமது அரசியல் எதிரிகளை அடக்குவதற்கு வன்
முறைகளையும், குண்டர்களையும் ஜனநாயக
விரோத நடவடிக்கைகளையுமே காலம் காலமாக
மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், ஆரம்பத்
தில், அதாவது அந்நியர்கள் இலங்கையை விட்டு
வெளியேறிய காலத்தில் அவர்களின் இந்நடவடி
க்கை, தமிழ் மக்களுக்கு எதிராக இருந்தது. அதா
வது பரீட்சார்த்த நடவடிக்கைகள் யாவும் தமிழ
ருக்கு எதிராக இருந்தது. இதனால் இதனை சிங்
களவர்கள் எவரும் கண்டு கொள்ளவில்லை.
மாறாக ஆதரவும் வழங்கினார்கள். இதன் காரண
மாகவே தமிழ் மக்கள் பாராளுமன்ற ஜனநாயக
முறையைக் கைவிட்டு ஆயுதம் ஏந்திப் போராட
வேண்டிய நிலை ஏற்பட்டது.

மலையகத் தமிழர்களின் வாக்குரிமைகளை
ஐக்கிய தேசியக் கட்சி பறித்து, பின்னர், அதே
வழியைப் பின்பற்றி எதிர்க்கட்சித் தலைவி சிறி
மாவோ பண்டாரநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்
டாரநாயக்காபோன்றோரின் குடியியல் உரிமைகள்
பறிக்கப்பட்டது. மேலும் 1956இல் காலிமுகத் திட
லில் உண்ணாவிரதமிருந்த தமிழர்கள் சிங்களக்
குண்டர்களால் தாக்கப்பட்டார்கள். அண்மையில்
கொழும்பிலிருந்து கதிர்காமம் சென்ற பாதயாத்
திரைக்காரர்களும் அதே போன்று குண்டர்களால்
தாக்கப்பட்டார்கள். இதே போன்றே பயங்கரவாத
தடைச்சட்டம் கொண்டுவரப் பட்டபோது தமிழ
ருக்கு எதிரானது என்றே சகல சிங்களவர்களும்
கருதினார்கள். பின்னர் இச்சட்டத்தைக்
கொண்டே பல்லாயிரக்கணக்கான சிங்கள இளை
ஞர்கள் கொன்று குவிக்கப் பட்டார்கள்.

இதேபோன்று, யாழ். குடாநாட்டில் இருந்து
வெளிவந்த பத்திரிகையை சிங்கள இராணுவம்
தீயிட்டுக் கொளுத்திய போது கொழும்புப் பத்தி
ரிகைகள் மௌனம் சாதித்தன. ஆனால் இன்று
அதேவழியில் சிங்களப் பத்திரிகையாளர்கள் அதே
வழிமுறைகளைப் பின்பற்றி தாக்கப்பட்டும், பத்தி
ரிகைக் காரியாலயங்கள் உடைக்கப்பட்டும் வரு
கின்றன.

ஆனால், இதற்காகச் சிங்களத் தரப்பில் எவ
ரையும், எவரும் குறை கூறிவிடமுடியாது. அதா
வது சிங்கள அரசியல்வாதிகளும், பத்திரிகை
களும் தாம் விதைத்ததை அறுக்கத் தொடங்கி
விட்டார்கள். இதற்காக அவர்கள் முன்னர் ஆட்
சியில்இருந்தவர்களையோ, தற்பொழுதுஆட்சியில்
இருப்பவர்களையோ நொந்து பயனில்லை. ஏனெ
னில், இந்நிலையின் உருவாக்கத்திற்கு இவர்களும்
தங்களால் இயன்ற பங்களிப்பைக் கடந்த காலத்
தில் போதிய அளவில் வழங்கியவர்களே ஆகும்.

---

துள்ளதாக தெரிவிக்கப்படுகி
றது.

இது குறித்த தீர்மானத்தை
சென்னையில் கடந்த வாரம்
கருணாநிதி தலைமையில்
கூடிய தி. மு. க நிர்வாகக்
குழு எடுத்தது என்றும், இந்த
மகஜர் தமிழக மாநில ஆளு
நர் பீஷ்ம நாராயண சிங்கி
டம் ஒப்படைப்பது என்று
தீர்மானிக்கப்பட்டதாகவும்
கூறப்படுகிறது.

அரசாங்க நிறுவனமான
'டான்ஸி'க்கு சொந்தமான
நான்கு கோடி ரூபாய் பெறு
மதியான நிலத்தை ஜெயா

என்பது குறிப்பிடத்தக்கது.

கருணாநிதிக்கு எதிராக நிய
மிக்கப்பட்டிருக்கும் விசா
ரணை ஆணைக்குழுவை கடு
மையாக கண்டனம் செய்
திருக்கும் நிர்வாகக்குழு இது
கருணாநிதியையும், அவரது
குடும்ப உறுப்பினர்களையும்
அவமானப்படுத்தும் நோக்கில்
செய்யப்பட்டிருக்கும் காரியம்
என்று கூறியிருக்கிறது.

கருணாநிதிக்கு எதிரான
பிரசாரத்தை தீவிரப்படுத்து
மாறு அ.தி.மு.க. மாவட்டச்
செயலாளர்களுக்கு ஜெய
லலிதா விடுத்த கோரிக்கையை

செய்யுமாறு கழக ...
டர்களுக்கு தெரிவித்துள்ளது.

கருணாநிதிக்கு எதிரான
விசாரணை ஆணைக்குழு
மாநில அரசின் ஒருதலைப்
பட்சமான முடிவு அல்ல.
மத்திய அரசின் ஒப்புதலுடன்
செய்யப்பட்ட ஒரு காரியம்
என முதலமைச்சர் ஜெய
லலிதா கூறியிருப்பதை குறிப்
பிட்ட தி.மு.க. நிர்வாகக்
குழு இது குறித்து பிரதமர்
நரசிம்மராவும் ஏனைய மத்திய
அமைச்சர்களும் நிலைமையை
தெளிவுபடுத்த வேண்டும்
என்று வலியுறுத்தியிருக்கிறது

---

புதிய கட்டடத்திற்கு அடிக் ... தெரிவித்தார்.

## அடுத்த செயற்கை கோள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில்

இந்தியாவின் மூன்றாவது
தொலை உணர்வு செயற்கைக்
கோளான ஐ. ஆர். எஸ். 1 சி.
அடுத்த ஆண்டின் தொடக்
கத்தில் விண்ணிற்கு ஏவப்
படும் என்று இந்திய விண்
வெளி ஆராய்ச்சி நிறுவனத்
தின் இயக்குனர் கஸ்தூரி ரங்
கன் கூறியுள்ளார்.

மைசூரில் நிகழ்ச்சி ஒன்றில்
பேசிய அவர் மேலும் கூறுகை
யில், நாட்டின் தனித்தன்மை
வாய்ந்த செயற்கைக் கோள்
அமைப்பை மேம்படுத்துவத
ற்கு ஐ, ஆர். எஸ். 1 சி.
உதவும் என்றும் தெரிவித்தார்

---

# கொராட்சி நகர முற்றுகை; நீக்க சேர்பியா இணக்கம்

(சரயேவோ)

பொஸ்னியா- கர்சகோவி
யாவின் தலைநகர் சரயேவோ
விற்கு தென்கிழக்கே அறுபத்து
நான்கு கிலோமீற்றர்தொலை
வில் இருக்கும் கொராட்சிக்
நகரின் மீதான கடந்த நான்கு
மாதகால முற்றுகையை நீக்கு
வதற்கு, சேர்பியதலைவர்கள்
இணக்கம் தெரிவித்துள்ளனர்.

லண்டன் மாநாட்டில் இண
க்கம் காணப்பட்டதற்கு ஆதர
வாக இம்முடிவு எடுக்கப்பட்ட
தாக சேர்பியத் தலைவரான
ஆர். கராா்ஜிக் தெரிவித்துள்
ளார்.

லண்டன் மாநாட்டில்
கொராட்சிக் நகர் மீதான முற்
றுகையை நீக்குவது, கனரக
ஆயுதங்களை ஐ.நா.விடம்
கையளிப்பது என்பன உட்பட
பல விடயங்கள் தொடர்பாக
இணக்கம் காணப்பட்டிருந்
தது தெரிந்ததே.

எனினும் கொராட்சிக் நக
ரின் மீதானமுற்றுகையை தள
ர்த்தும் நோக்கில் சுமார் ஆயி
ரம் சேர்பிய துருப்புகள் மீளப்
பெறப்படும் என்றும் கனரக
ஆயுதங்கள் ஐ நா.விடம் ஒப்ப
டைக்கப்படும் என்றும் கராா்
ஜிக் கூறியதை மறுத்துள்ள
பொஸ்னியத் துணை அதிபர்,
கொராட்சிக் நகரில் தொடர்
ந்தும் கடும் சண்டை நடப்ப
தாக கூறியுள்ளார்.

---

ஜாகர்த்தாவில் அணிசேரா மாநாடு

## தலைவர்களின் உயிர்கள் 1,23,000 டொலர் பெறுமதி

இந்தோனேசிய தலைநகர்
ஜாகர்த்தாவில் அடுத்த
வாரம் நடைபெறும் அணி
சேரா இயக்கத்தின் உச்சிமகா
நாட்டில் கலந்து கொள்ளும்
வெளிநாட்டு அரசாங்க தலை
வர்கள் ஒவ்வொருவரினதும்
உயிரும் தலா 25 கோடி ரூபா
விற்கு (ஒரு லட்சத்து 23 ஆயி
ரம் அமெரிக்க டொலர்கள்)
காப்புறுதி செய்யப்பட்டிருப்ப
தாக உத்தியோக பூர்வ அன்
டாரா செய்தி ஸ்தாபனம்
அறிவித்தது.

மாநாட்டுக்கென வரும்
வெளிநாட்டமைச்சர்களின்
உயிருக்கான காப்புறுதி
தொகையிலும் பார்க்க இத்
தொகை இரட்டிப்பு மடங்
கானதாகும் என்றும், மாநாட்
டுக்கு வரும் சகல தூதுக்
குழுக்களும் காப்புறுதி செய்
யப்பட்டுள்ளதாகவும் தெரி
விக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாநாட்டுசெய்தி
களை திரட்ட உலகின் பல
பாகங்களிலும் இருந்து
வரும் நூற்றுக்கணக்கான பத்
திரிகையாளர்களும் இக்காப்பு
றுதியில் சேர்க்கப்பட்டுள்ள
னர். ஆனால் அவர்களின் உயி
ருக்கான பெறுமதி அரசாங்க
தலைவர்களின் உயிரின்பெறும
தியின் பத்தில் ஒரு பங்காகும்.
அதாவது இரண்டு கோடி ஐம்
பது லட்சம் ரூபாவாகும். (12
ஆயிரத்து 300 அமெரிக்க
டொலர்)

பி.ரி. ஏஜன்ரஹார்ஜா இன்
சூரன்ஸ் தாஸ்வின் என்ற இந்
தோனேசிய தனியார் நிறுவ
னம் ஊடாகவே வெளிநாட்டு
தலைவர்களின் உயிருக்கு காப்
புறுதி செய்யப்பட்டுள்ளது.

106 உறுப்பினர்களைக்
கொண்ட அணிசேரா இயக்க
த்தின் உச்சி மகாநாடு நாளை
ஆரம்பமாவதுதெரிந்ததே இம்
மகாநாடு 6ஆம் திகதி வரை
நடைபெறும்.

---

## அமெரிக்க நடவடிக்கைக்கு ஈராக் கண்டனம்

(பீக்கிங்)

தென் ஈராக்கில் நிகழ்ந்து
வரும் சம்பவங்கள் குறித்து
சீனா கவலை வெளியிட்டுள்
ளது. தெற்கு ஈராக்கின்மீது
விமானங்கள் பறப்பதற்கு
அமெரிக்காவும், நேசநாடுகளும்
தடை விதித்திருப்பது பற்றி
முதன் முதலாக வெளியிட்ட
கருத்தில் ஈராக்கின் ஒற்றுமை
யையும், பிரதேச ஒருமைப்
பாட்டையும் பாதிக்கக் கூடிய
வகையில் எடுக்கப்படும் நட
வடிக்கைகளுக்கு கண்டனம்
தெரிவித்துள்ளது

அத்துடன் பாரசீக வளை
குடாப் பகுதியில் மீண்டும்
பதற்றம் தோன்றுவதை சீனா
விரும்பவில்லை எனவும், ஈராக்
மக்களின் நன்மை கருதியே
ஐ. நா. தீர்மானங்கள் அமுல்
நடத்தப்பட வேண்டும் என்
றும் கூறியுள்ளது.

---

## கொள்ளையடித்தவர் கைது

(சென்னை)

தமிழ்நாடு தொழில் முத
லீட்டுக் கழகத்தின் கோயம்
புத்தூர் கிளை அலுவலகத்தில்
துப்பாக்கி முனையில் ஒரு லட்
சம் ரூபா பணத்தை கைப்பற்
றிக்கொண்டோடிய இளை
ஞர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்
பட்டார். சோதனையின்
போது அவ் இளைஞர் வைத்
திருந்தது விளையாட்டுத் துப்
பாக்கி என்றுதெரியவருகிறது.

---

## 25,000 ரூபாய் கொள்ளை

(சென்னை)

விழுப்புரம்-திருச்சி நெடுஞ்
சாலையிலுள்ள பெற்றோல்
பங்க் ஒன்றிற்கு நேற்று முன்
தினம் அதிகாலையில்ஆயுதங்க
ளோடு புகுந்த சிலர்அங்கிருந்து
சுமார்இருபத்தையாயிரம் ரூபா
ரொக்கப்பணத்தை கொள்ளை
யடித்துச் சென்றுள்ளனர். இச்
சம்பவத்தின்போது அங்கிருந்த
ஊழியர்கள் தாக்கப்பட்டும்உள்
ளனர்.

---

## காபூலில் அமைதி நிலை

சண்டை நிறுத்த உடன்
படிக்கைக்கு காபூ
லில் வெவ்வேறு அர்த்தங்கள்
கள் கூறப்படுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி அரசுக்கு
ஆதரவளித்த மக்கள் படை
வெளியேற வேண்டுமென்பதே
சண்டை நிறுத்த உடன்படிக்
கையின் முக்கிய நோக்கம்
என்று குல்புதீன் கேக்மத்தி
யார் கூறியுள்ளார் ஆனால்
அரசாங்கமோ எல்லா மக்கள்
படைகளினதும் ஆயுதங்கள்
களையப்படல் வேண்டும்
என்று கூறிவருகிறது.

ஈழநாதம்

# உருக்குப் போன்ற உறுதியான தமிழர் விடுதலைப் போராட்டம்

**- புவியரசன்**

(வடமராட்சி)

இரும்பைப் போன்று இறுக்கமான சக்தியைக் கொண்ட எமது அமைப்பை எதிரியால் அழிக்க முடியாது. தமிழ் மக்களின் போராட்டம் உருக்குப் போன்றதாக திகழ்கிறது.

இவ்வாறு பருத்தித்துறை பழைய மைதானத்தில் நேற்று முன்தினம்29 ஆம் திகதி இரவு யாழ். மாவட்ட கடற் புலிகள் பொறுப்பாளர் திரு. புவியரசன் தலைமையில் நடைபெற்ற 9 மாவீரர்களின் உருவப்படங்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் வைபவக் கூட்டத்தில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா பேசினார்.

அவர் மேலும் பேசும் போது, இந்த மண்ணில் சிங்களம் மட்டுமே நிலைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே எதிரி செயற்பட்டு வருகிறான். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருக்கும் வரை நாம் அதை எதிர்த்து எதிரிக்கு தக்க பாடம் கற்பித்தே தீருவோம். விடுதலைப் போராட்டத்தின் இறுக்கத்தை எதிரி கண்டு கொண்ட போதிலும் அதனை அழிக்க அவனால் முடியாது.

எமக்கு ஒரு பாரிய இழப்பு ஏற்படும் போது எதிரிக்கு ஒரு பாரிய இழப்பை நாம் கொடுக்கின்றோம். எங்கள் மண்ணில் எமது இனம் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழும் வரை எமது போராட்டம் தொடரும்.

இந்த மண்ணில் எழுந்திருக்கின்ற சுதந்திர தாகத்தை அழிக்க வந்த இந்தப் படைக்கு விடுதலைப் புலிகளின் வீரம் புரிய வைக்கப்படும். எதிரிக்கு தக்க பாடம் கற்பிக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள். நடந்து வந்த பாதையில் நாம் கண்டு கொண்ட சம்பவங்கள் ஒரு சரித்திரமாகி விடுதலைப் போரின் பெரும் சக்தியாகி உலகமே வியக்கும் வகையில் வரலாற்றுச் சரித்திரத்தைப் பெற்றுள்ளது என்றார்.

மற்றும் பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன், வடமராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி பூங்கோதை ஆகியோரும் உரையாற்றினர். மாவீரர்களின் தீபங்களுக்கு கரவெட்டி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் தீபம் ஏற்றிவைத்தார். (82)

## கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும்

திருநெல்வேலி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சார்ந்த எம். துரைரத்தினம் அவர்களின் உடுப்புகள், படிப்பைத் தொடர்வதற்குரிய புத்தகங்கள் அடையாள அட்டை போன்ற மிகவும் முக்கிய ஆவணங்களடங்கிய பிறவுண் மஞ்சள் நிற பிரயாணப் பைகள் இரண்டு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நேரிலோ ஈழநாத காரியாலயத்திலோ, ஆலங்கேணி முகாமிலோ ஒப்படைக்கும்படி வேண்டுகிறார்

## மாவீரர் நினைவுக் கூட்டம்

ஆவணி மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களான லெப். சாந்தன், லெப். சீனு, வீரவேங்கைகள் சீலன், விமலன், நிசாந்தன், காந்தன், சுபாஸ், முகுந்தன், கங்கை, சின்னப்பதாஸ், எடறிக், ஆனந்த், கர்ணன், மணியரசன் ஆகியோரை நினைவு கூர்ந்து நடாத்தப்படும் 'மாவீரர் நினைவஞ்சலிக் கூட்டம்' இன்று திங்கட் கிழமை இரவு யாழ் - புகையிரத நிலையத்தில் நடைபெறும். (22)

# சிங்களக் குடும்பங்கள் அச்சத்தால் வெளியேற்ற

(வவுனியா)

வவுனியா எல்லைப் புறகிராமங்களைச் சேர்ந்த 2000க்கு மேற்பட்ட குடியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்கள் அச்சம் காரணமாக அனுராதபுரம் நோக்கி நகர முற்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இறப்ப மடுவில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதல் காரணமாக இப்பகுதி சிங்கள குடியேற்ற வாசிகள் பீதியடைந்து காணப்படுவதாகவும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சிங்கள பாதுகாப்பு படையிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவி... கிறது.

## அகதிகளை திருப்பி அ... டென்மார்க் முயற்...

டென்மார்க்கில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப அந்நாட்டரசு முடிவு செய்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

அங்கு முகாம்களில் தங்கி இருக்கும் அகதிகள் பற்றி இரண்டு வா... முன்பே தகவல் ... பட்டிருப்பதாகவும், ஐநூறு இலங்கைத்த... கள் அங்கு தங்கியி... வும் மேலும் தெரிய...

# விமானத்திற்கு குண்டு வை... சீக்கிய தீவிரவாதி கை...

(டில்லி)

ஏயர் இன்டியா ஜெட் விமான வெடி விபத்துக்கு முக்கிய காரணமானவர் என்று சந்தேகிக்கப்படும் லால் சிங்கை விசாரிப்பதற்காக மூன்று கனேடிய உயர் அதிகாரிகள் புதுடில்லி வந்துள்ளனர். இந்த விபத்து 1985 இல் இடம் பெற்றது.

ரொறன்டோ - புதுடில்லி பயணத்தை மேற்கொண்ட கனிஸ்கா என்று பெயரிடப்பட்ட இந்த விமானம் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு அயர்லாந்து கரைக்கு அருகே வான் பரப்பில் வெடித்துச் சிதறியது இதில் பயணம் செய்த 329பேரும் கொல்லப்பட்டனர்.

இந்த விபத்தைப் பற்றி விசாரித்த சமயம் லால் சிங் என்ற கனேடிய சீக்கியர் தனது பயணப்பெட்டியை விமானத்தில் ஏற்றிவிட்டுத் தான் அதில் பயணம் செய்யாமல் தவிர்த்துக் கொண்டார் என்று தெரிய வந்துள்ளது.

விபத்து நடந்தது முதல் இவர் கனடாவிலிருந்து தலைமறைவாகினார் இந்தியாவில் தங்கியிருந்த இவர் புனை... டியில் பயணம் செய்கிறார் என்ற தகவலின் பேரில் பம்பாய்ப் பொலிசார் ... கைது செய்துள்ளா...

லால் சிங்கை வி... செய்வதன் மூலம் ... தீவிரவாதிகளின் ... வெளிநாட்டு ... ளைப் பற்றி அறியல... பொலிசார் தெரிவி... சொல்லப்படுகிறது.

## ரஷ்யா விஜயம்

இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் திரு சரத்பவார் எதிர் வரும் 7 ஆம் திகதி ரஷ்யாவிற்குச் செல்லவுள்ளார் எனத் தெரியவருகிறது இந்த விஜயத்தின்போது இராணுவ ஒத்துழைப்பு, உதவிகளை ரஷ்யாவில் இருந்து மேலும் அதிகமாகப் பெறுவது குறித்து ஆராயப்படும்.

## ராணுவத்திலிருந்து ஓடிய... பொலிஸ் சூட்டிற்கு ப...

(கொழும்பு)

அனுமதி பெறாமல் இராணுவ சேவையில் இருந்து நீண்ட நாட்களுக்கு முன்னர் விட்டுச் சென்ற நபர் ஒருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சாய்ந்த மருதில் நடைபெற்றது. சாய்ந்தமருதில் மஜீதுபுரம் இடத்தில் காவல் கட... ஈடுபட்டிருந்த பொலி... சிறிது தூரத்தில் நட... நபர் ஒருவர் மீது துப்ப... பிரயோகம் செய்த... றும் தெரிவிக்கப்படுகி...

இவர் மல்வத்தை இரா... பயிற்சி முகாமில் ... மதியின்றி வி... சமரசேகர என்... ளம் காணப்பட்... தெரிவிக்கப்படுகி...

**கடற்படை**

கின்றது

இதேவேளை வடபகுதியில் கடற்படையினர் கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பு வேலைக்கென 10 அதிவேக விசைப் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஆழம் குறைந்த பகுதிகளில் செல்லக்கூடிய பகுதிகளில் காயமடைந்த படையினரை மீட்பதற்கு பயன்படும் எனவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

**சிங்களக் கட்...**

சமசமாஜ கட்சியும் ... இடதுசாரி முன்னணி... அமைக்கும் முயற்... பட்டு வருவதாகவும் ... க்கப்படுகிறது.

# முடியுமானால் பதவி விலகி தேர்தலில் போட்டியிட வருக

## பிரேமதாசாவிற்கு சிறிமாவோ சவால்

(கொழும்பு)

முடியுமானால் பதவியைராஜினாமச் செய்துவிட்டு தன்னுடன் பொதுத்தேர்தலில் போட்டியிட முன்வருமாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு சவால் விடுத்துள்ளார்.

தோற்கடிக்கப்பட்ட குற்றப்பிரேரணை மனுவின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும், கூறியிருப்பதாவது.

இக் குற்றப்பிரேரணையில் கையெழுத்திட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களும், அதில் கூறப்பட்டிருப்பவற்றை அங்கீகரித்து உள்ளனர் இவ்வாறு கைச்சாத்திட்டவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த முப்பது பேரும் உள்ளனர் என்பது ரகசியமானதல்ல.

இதில் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை பாராளுமன்றமோ, அல்லது சபாநாயகரோ நிராகரிக்கவில்லை.

தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் கூட ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் இடம்பெற்றிருப்பதாகக் கூறியுள்ளார். இத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர். பிரேமதாசா தலைமையிலான யு என் பி அரசே இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்ட ஒழுங்கீனங்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுகளும் நாட்டு மக்களின் முன் இன்னமும் உள்ளது.

போரில் இருந்தும், வன்முறைகளிலிருந்தும், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றில் இருந்தும் நாட்டையும், மக்களையும் மீட்க தான் தயாராக இருப்பதாகவும் திருமதி சிறிமாவோ குறிப்பிட்டுள்ளார்.

இக் குற்றப்பிரேரணையின் ஓராண்டு பூர்த்தி தொடர்பாக நுவரெலியா மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பியான எஸ் பி.திசநாயக்கா எழுதி வெளியிட்ட நான் கையெழுத்திட்ட குற்றப்பிரேரணை என்னும் தலைப்பிலான நூலும் திருமதி சிறிமாவோவிற்கு அவரது இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

**வெள்ளை**

# பொதுவேட்பாளராக சிறிமாவோ: லலித் - காமினி ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தான் போட்டியிடுவதற்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவு இருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூறியிருப்பதை ஜனநாயக ஐக்கிய...

கொழும்பு கம்பெல் பூங்கா மைதானத்தில் அண்மையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவில் பிரேமதாசாவிற்கு எதிரான இம்பீச்மென்ட் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் ஓராண்டு நினைவாக நடந்த பொதுக் கூட்டத்தில்திருமதிசிறிமாவோவும் கலந்து கொண்டார் என்பது தெரிந்ததே.

**தென்னிலங்கையில்**

டத்தில் இடமில்லை என்பதாலும் இந்தத் தீர்ப்பு மிக

# மரண அறிவித்தல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தான் போட்டியிடுவதற்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவு இருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூறியிருப்பதை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களான லலித்அத்துலத்முதலி, காமினி திசநாயக்க ஆகியோர் திட்டவட்டமாக மறுத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

## தென்மராட்சி

பட்டதிரைச்சீலையாலும் மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட அஞ்சலி ஊர்தி பளையிலிருந்து புறப்பட்டு கைதடி ஊடாக மீசாலை வடக்கு விக்னேஸ்வராவித்தியாசாலையை வந்தடைந்தது.

இந்தஅலங்கார ஊர்தியுடன் சின்னமண்டலாயில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் மறைவாணன், வீரவேங்கை கோமகன் ஆகியோரது புகழுடம்புகளும் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகள், வீட்டு வாசல்கள் தோறும் குத்து விளக்குகள் ஏற்றி மாவீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

விக்னேஸ்வர வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலி செலுத்தியபின்னர் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்ததும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாவீரர்களின் புகழுடல்கள் விதைக்கப்பட்டன.

இதே போன்றே வடமராட்சியிலும் ஒன்பதுமாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய அஞ்சலி ஊர்தி வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டபோது ஆயிரக்கணக்கானமக்கள் ஆங்காங்கே திரண்டு நின்று மலர் தூவி தங்கள் அஞ்சலியை செலுத்தினார்கள்.

## ஓராண்டு

பாடசாலைகளில் இரண்டு வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு கம்பெல் பூங்கா மைதானத்தில் அண்மையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவில் பிரேமதாசாவிற்கு எதிரான இம்பீச்மென்ட் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் ஓராண்டு நினைவாக நடந்த பொதுக் கூட்டத்தில்திருமதிசிறிமாவோவும் கலந்து கொண்டார் என்பது தெரிந்ததே.

# கட்சித் தலைவர் தெரிவு; சிறிமாவுக்கே உரிமை

சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைவரைத் தீர்மானிக்கும் உரிமை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு உண்டு என்று அக் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

அக்கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் இது பற்றிக் கூறுகையில் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கட்சி ஆரம்பித்தபோது ஏற்பட்ட சவால்களைசந்திப்பதில் திருமதி சிறிமாவோ பின்னணியில் இருந்து செயற்பட்டவர் என்றும், இதனை அவசரக்காரர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்தனர்.

# அமெரி. புயற் காற்றினால் பாம்புகள் அதிகரிப்பு

அமெரிக்காவின் இரண்டு மாநிலங்களில் அண்மையில் வீசிய 'அண்ட்ரூ' என்ற கடும் புயலை அடுத்து அப்பகுதியில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாகி உள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புளோரிடா மற்றும் லூசியானா பகுதியில் உள்ள நீர் நிலைகளில் வாழ்ந்த பாம்புகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டமையே இதற்கான காரணமாகும். எனவே பாம்புகளும் ஏனைய நீர்ப் பிராணிகளும் வழமையை விட அதிகமாகவும் சுதந்திரமாகவும் நடமாடலாம் என மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

## தம்பலகாமத்தில்

றன.

தீ பரவியதை அறிந்த கோயில் குடியிருப்பு என்ற இடத்திலுள்ள அகதி முகாமில் உள்ள மக்கள் வந்து சேர்ந்து தீயைத் தடுக்க ஒரு நாள் முழுவதும் போராட்டம் நடத்தி ஒருவாறாக ஏனைய கிராமங்களுக்கும் தீ பரவாமல் தடை செய்யப்பட்டது.

தீ பரவிய கிராமங்களில் இருந்த இரண்டொரு கல் வீடுகளைத் தவிர எல்லா வீடுகளும், வேலிகளும், மரங்களும், மாட்டுக் கொட்டில்களும் எரிந்து நாசமாகி விட்டன.

தட்டான் திடல் என்ற இடத்தில் உள்ள தென்னந்தோப்பு முழுமையாக எரிந்து நாசமாகி சுடுகாடுபோல காட்சியளிக்கிறது.

இதே சமயம் மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளிலும் கடும் வரட்சி நிலவுவது தெரிந்ததே.

## நன்றித் திருப்பலி

(குருநகர்)

நேற்று முன்தினம் அதிகாலை கடற்புலிகளால் மண்டை தீவில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் எதிரியின் படகொன்றைக் கைப்பற்றி வந்ததை முன்னிட்டு நேற்றுக் காலை புனித யாகப்பர் ஆலயத்தில் கடற்புலிகள் சார்பில்நன்றித் திருப்பலி ஒப்படைக்கப்பட்டது.

அதனை அடுத்து யாழ். மாவட்ட கடற்புலிகள் தளபதி சூசை, யாழ் மாவட்ட கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் ஆகியோர் பொதுமக்களுக்கு சவ்வரிசிக்கஞ்சி வழங்கினர்.(21

நூலும் திருமதி சிறிமாவோவிற்கு அவரது இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளை

பிரயோகம் செய்தார். இதனை அவதானித்த லலித் சாதுரியமாக தப்பித்துக் கொண்டபோதும்பின்புறமாக வந்த மற்றொரு நபர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இவர் காலில் காயமடைந்தார். இவரது மெய்ப்பாதுகாவலர் மூவரும் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர்.

இதனைத் தொடர்ந்து துப்பாக்கி நபர்கள் தாம் வந்த வாகனத்தை கைவிட்டு சற்று அருகில் நிறுத்தி வைத்திருந்த மற்றொரு காரில் ஏறித் தப்பித்துக் கொண்டனர் என்றார்.

தற்போது இந் நபர்களால் கைவிடப்பட்ட வாகனம் தெகிவளை பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெஹிவளை பொலிசாரிடம் வினாவியபோது சனி, ஞாயிறு தினமாக இருப்பதால் வாகன பதிவாளர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இவ் வாகன உரிமையாளர் பற்றிய விபரங்களை அறியமுடியாதிருப்பதாக தெரிவித்தனர்

மாகப் பெறுவது குறித்து ஆராயப்படும்.

## தென்னிலங்கையில்

டத்தில் இடமில்லை என்பதாலும் இந்தத் தீர்ப்பு மிக முக்கியத்துவம்வாய்ந்ததொன்றாக அரசியல்வட்டாரங்களில் கருதப்படுகிறது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு சாதகமாக அமைந்தால், அவர்தமது பதவிக்காலம் வரையில் ஆட்சியில் தொடரவும், தேர்தல் செல்லுபடியாகாது அல்லது முறைகேடானது என்றுதீர்ப்பு வழங்கப்பட்டால் மறுதேர்தல் நடத்தப்படும் வாய்ப்பிருப்பதால் இத்தீர்ப்பு முக்கியமானதாக கருதப்படுகிறது.

தொடக்கம் முதல் இன்று வரை இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் குழுவில் நான்கு முறைகள் மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடக்கூடியது.

மக்கள் கலவரத்தில்இறங்கக்கூடாது என்று கொழும்பில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் மக்களை எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தீர்ப்பு யாருக்குச் சாதகமாக முடியும் என்பதே இப்போது கொழும்பில் அரசியல் வட்டாரங்களிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் பலமாக பேசப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 30-08-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5416

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-6154, 26-3578, 26-4558, 26-5113, 28-7560, 24-9758, 24-4282, 26-5870, 41-1227, 42-9345, 25-7772, 24-9938, 41-6933, 42-6452, 27-4673, 28-2156, 24-7628, 26-5405, 24-2496, 27-5045, 28-5039, 41-9530, 42 3924, 24-5964, 24-5188, 26-786, 41-1996, 27-4888, 26-9140, 41-8432, 28-9633, 27-1836, 26-9266, 42-1182, 24-5029

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்
27-2084, 27-1380, 27-5058, 28-0587, 26-6029, 24-8429, 26-2764, 24-6065, 24-4707, 42-1320, 42-7312, 26-5244, 40-2394, 26-3321, 42-1046, 41-9038, 26-3126, 24-7360,

# மரண அறிவித்தல்



## பாக்கியதுரை உதயகு[illegible]

(உதயன்)

[முன்னர் தமிழீழக் காவற்துறையின் நகரப் போ[illegible] வரத்துப் பிரிவில் கடமையாற்றியவர்]

இல. 156 பொன்னாலை வீதி, கட்டுடை மான[illegible]யைச் சேர்ந்த செல்வன் பாக்கியதுரை உதயகு[illegible] [உதயன்] 29 - 08 - 1992 அகால மரணம் ஆன[illegible] இவர் பாக்கியதுரை புனிதவதி தம்பதிகளின் அன்[illegible] புதல்வனும், சாந்தன், வசந்தன் [ஈழநாதம்], [illegible] [சுபராஜ் / மன்னார்], கண்ணன், சாந்தி ஆகியோ[illegible] அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கி[illegible]கள் 31-08-1992இன்று திங்கட்கிழமை காலை 10.00[illegible]யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று த[illegible] கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு [illegible]துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், [illegible]னர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கே[illegible] கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
வசந்தன் [ஈ[illegible]
[சகோதரன்]

[சி-4974]

# அறிவித்தல்

## தம்பையா-குமார[illegible]

29-8-92 அன்று வீரச்சாவு அடைந்த தம்[illegible] தாஸ் இவரது புகழ் உடல் இன்று 31-8-92 [illegible] மணியளவில் இவரது அளவெட்டி மை[illegible] போதைய இல்லத்தில் இருந்து மல்லாகப்[illegible]னத்தில் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்த[illegible] கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்ற[illegible]

அளவெட்டி (3106) குடும்[illegible]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.